வருகின்ற நம்முடைய மாநில அரசாங்கம் அவுட் ஓர்க் முறையை ஒழித்து பேக்டரியிலேயே வேலை நடத்த வேண்டுமென்று அவசரச் சட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் வர்க்கத்திற்கு உபயோகம் என்று சொன்னால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யும் ; அவசரச் சட்டம் கொண்டு வருவது பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, 1966 பீடித் தொழிலாளர்களுடைய பாதுகாப்புச் சட்டத்திலே வாராந்தர விடுமுறைகளுக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று இருக்கிறது; தமிழகத்திலே வாராந்திர விடுமுறைக்கு ஊதியம் வழங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அது அமல் படுத்தப்படுவதில்லை. ஆகவே, முழுமையான அளவில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மேலும், வீடுகளிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு லைசென்ஸ் வாங்கிக் கொடுத்து, வேலை அளிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. பீடித் தொழிற்சாலை உரிமையாளர்கள் அத்தகைய லைசென்ஸ் பெறாமலே, தொழில் நடத்துகிறார்கள். அதனால் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, தொழிற்சாலை உரிமையாளர்கள் லைசென்ஸ் பெறுகின்ற முறையிலே நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, லீவுக்குப் பதிலாக எப்படி பணம் தரப்படுகிறது என்பதைக்கூறினேன். எனவே, அவர்களுக்கு லீவு கிடைக்கிறது. லீவாகக் கொடுக்காமல் அதற்கு வேண்டிய பர்சன்டேஜ் பணம் கொடுக்கப்படுகிறது. மற்றபடி, ஏதாவது, தவறுகள் நடக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன்கள்.

*வினா எண். 293—வேடசெந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கடன் வழங்குவதற்கு 10 வீடுகள் இருந்தால்தான் கடன் கொடுக்கபடும் என்று விதி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவ் விதியை அரசு தளர்த்துமா ?

[1981 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இவ்விதியை, சிறிது தளர்த்தி, அரசு 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாளில் ஆணை பிறப்பித்துள்ளது. அதன் படி, ஒரு கிராமத்தில் ஏற்கெனவே உள்ள வீடுகளின் எண்ணிக்கையில், 5 சதவீதத்திற்கு தனித்தனி வீடுகள் கட்ட கடன் அனுமதி வழங்கலாம். ஆனால், இவ்வாறு தனித்தனி வீடுகளுக்கு கடன் அனுமதிக்கப்படுவது, ஒரு கிராமத்தில் குறைந்த பட்சம் 10 வீடுகளுக்குக் குறையாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் மட்டும் இப்படி குரூப் ஹவுசிங் சிஸ்டம் இல்லாமல், தனித்தனி வீடுகள் கட்ட, கிராமீயக் கூட்டுறவுச் சங்கத்திலே கடன் அளிக்கலாம் என்ற விதி இருப்பதாகத் தெரிகிறது. அதே போல், மற்றைய மாவட்டங்களிலும், தனிப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்க வழி செய்யும் வகையில், அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராம மக்கள் தங்களுக்குச் சொந்தமான தோட்டங்களுடன் கூடிய நிலங்களில் பரவலாக வசித்து வருவதால், அவர்களை குரூப் வீடுகள் கட்டும் படி வலியுறுத்த வேண்டியதில்லை. அவர்களைப் பொறுத்தவரை பரவலாக வீடுகள் கட்ட கடன் அனுமதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு அது பொருந்தாது.

திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கிராமியக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் வழங்குகின்றபொழுது, கடனுக்கு விண்ணப்பிக்கின்றவர்கள் தொழு நோயாளிகளாகவோ, காச நோயாளிகளாகவோ இருந்தால், கடன் வழங்கப்பட முடியாது என்று சொல்கிறார்கள். கடன் பெறுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரிசன மக்கள். அரிசனங்களுக்கு வழங்கப்படுகிற பட்டாக்களை அந்தக் குடும்பத்திலே இருக்கிறவர்களுக்கு மாற்ற வேண்டும் என்றால்கூட, 10 ஆண்டுகளுக்கு மாற்றக் கூடாது என்ற கண்டிஷன் அடிப்படையிலே பட்டா வழங்கப்படுகிறது. ஆகவே, அதைத் தளர்த்தி, அப்படி தொழு நோய், காச நோயால் பாதிக்கப்பட்டவர்கள் விண்ணப்பம் செய்தால், அவரே எழுதிக் கொடுத்தால், அவர் குடும்பத்திலேயிருக்கிற ஒருவருக்கு அந்தக் கடன் வழங்கலாம் என்று அரசாணை பிறப்பிக்க அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்பற்றி கவனிக்கலாம்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவு மூலமாக வழங்கப்படுகின்ற இந்தக் கடன் இப்பொழுது எவ்வளவு வழங்கப்படுகிறது ? ஏற்கெனவே வழங்கப்பட்ட கடனைவிட இப்பொழுது குறைவாக வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன். ஒரு நபருக்கு இப்பொழுது ரூபாய் 3,700 வழங்கப்படுகிறது என்று கருதுகிறேன். அந்தக் கடன் சாதாரணமாக, செங்கல் வாங்கக்கூட போதவில்லை. இனி வழங்கும், கடனை, ஏற்கெனவே கொடுத்தது மாதிரி ரூபாய் 5,000 அல்லது ரூபாய் 6,000 ஆக உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போடும்படி வேண்டிக் கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமீயக் கூட்டுறவுகள் வீடுகள் கட்டும் திட்டத்தில் தவணைமுறையிலே கடன் வழங்குகின்றகாரணத்தால், அதிகமாகக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கின்ற முறையில், அரசு விரைவாகத் தர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 294—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுகளில் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தடுத்து அணை கட்டி பாசன வசதி செய்யும் உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள காட்டாறுகளின் குறுக்கே 15 இடங்களில் அணைகள் கட்டுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவை தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளன என்று சிறுபாசனத் தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.